காலைக்கதிர் Kalaikkathir



# சமஷ்டியை விட்டுக்கொடோம்!

**நேற்றுப் பருத்தித்துறையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அலுவலகத்தில் நடந்த நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் ஆற்றிய உரை இது.**

எமது கட்சி ஏன் ஆரம்பமானது, அதன் செயற்பாடுகள் என்ன என்று கட்சியில் புதிதாகச் சேர்ப்பவர்களும் கட்சியில் இருப்பவர்களும் தெரிந்து வைத்திருக்கவேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற போது தமிழ்க் காங்கிரஸ் என்றொரு கட்சி இருந்தது. அதன் பிறகு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸாக அது மாற்றம் பெற்றிருந்தது.

அந்தக் கட்சியிலேதான் ஆரம்பத்தில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றி பெற்று உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இதன் தலைவராக ஜீ.ஜீ.பொன்னம்பலம் இருந்தார். இதன் துணைத் தலைவராக தந்தை செல்வா இருந்தார். சுதந்திரம் கிடைத்தவுடனேயே அன்றைய முதலாவது அரசில் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம்தான் பிரஜாவுரிமைச் சட்டம். அந்தச் சட்டத்தைத் தமிழ்க் காங்கிரஸ் எதிர்த்தது.

ஏனென்றால் யார் இந்த நாட்டின் பிரஜை என்று வரை விலக்கணப்படுத்தப்படுகின்ற போது அந்த வரைவிலக்கணத்திலிருந்து மலைநாட்டிலே வாழ்ந்து கொண்டிருந்த இந்தியவம்சாவளித் தமிழர்கள் விலக்கப்பட்டார்கள். இதனால் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் அதனை எதிர்த்து வாக்களித்தது. இதில் பலருக்கு ஐயப்பாடுகள் இருக்கின்றன. அதனைத் தெளிவுபடுத்த வேண்டும்.

### ஜீ.ஜீ.செய்தவை

அதாவது, அடுத்ததாக புதிய சட்டமாக இந்திய – பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதிலே தான் இந்த மக்களுக்கு இந்த நாட்டிலே பிரஜாவுரிமை இல்லை என்பதை உறுதி செய்கின்ற விடயம் கொண்டு வரப்பட்டிருந்தது. அவ்வாறு அதைக் கொண்டு வந்த போது தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் டி.எஸ். சேனாநாயக்கவின் அமைச்சரவையில் ஓர் அமைச்சராகச் சேர்ந்துவிட்டார். அதனால் அந்தச் சட்டத்தை அவர் ஆதரித்தார். ஆனால் அந்தச் சட்டத்தை ஆதரிக்கக் கூடாதென்று தந்தை செல்வா உள்ளிட்ட தலைவர்கள் கட்சிக்குள்ளே முரண்பட்டார்கள். அதன் பின்னரே கட்சியை விட்டு விலகி இலங்கைத் தமிழரசுக் கட்சியைத் தந்தை செல்வா ஆரம்பித்தார். இதுதான் கட்சி ஆரம்பிக்கப்படுவதற்கான காரணம்.

பிரஜாவுரிமைச் சட்டத்தை தமிழ்க்காங்கிரஸ் முற்றாக எதிர்த்து வாக்களித்தது என்ற ஒரு காரணத்தை அல்லது அந்தச் சம்பவத்தை மேற்கோள் காட்டி சிலர் இன்றைக்குத் தவறானதொரு பிரசாரம் செய்கின்றனர். அது என்னவென்றால் இந்தப் பிரஜாவுரிமையை நீக்குகின்ற முயற்சிளை ஜீ.ஜீ. பொன்னம்பலம் எதிர்த்து வாக்களித்தார் என்று சொல்கின்றார்கள். அது தவறான பிரசாரம்.

### தந்தை எதிர்த்தார்

இந்திய – பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற போது அப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தகநாயக்க அதனை வாக்குக்கு விடுகின்றபோது பெயர் குறிப்பிட்டு ஒவ்வொருவரும் வாக்களிக்க வேண்டுமென்றார். அவ்வாறு அதற்குச் சார்பாக அல்லது அதற்கு எதிராக என்று பெயர் சொல்லி வாக்களிக்க வேண்டிய நிலையில் துரதிர்ஷ்டவசமாக அந்தச் சட்டத்திற்கு ஆதரவாக ஜீ.ஜீ. பொன்னம்பலம் வாக்களித்தார்.

அதே நேரம் தந்தை செல்வாவும் மற்றவர்களும் அதனை எதிர்த்து வாக்களித்தார்கள். இது பதிவில் இருக்கிறது. நான் அதனுடைய ஒரு பிரதியை எடுத்து எப்போதும் என்னுடைய வாகனத்தில் வைத்திருக்கிறேன். ஆனால் இன்றைக்கு இல்லை. இருந்தும் தேர்தல் காலத்தில் எப்பொழுதுமே என் வாகனத்தில் தொடர்ச்சியாக அது இருந்தது. இவை அன்றைக்கு நடந்த விடயங்கள்.

### சமஷ்டிக் கட்சியே தமிழரசுக் கட்சி!

தமிழரசுக் கட்சி ஒரு சமஷ்டிக் கோரிக்கையின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்ட கட்சி. இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பது அதனுடைய உத்தியோகபூர்வமான பெயராக இருந்தாலும் வெளியிலே எங்கேயும் சமஷ்டிக் கட்சி என்றுதான் சொல்வார்கள். அதிலும் உத்தியோகபூர்வமான தேர்தல் முடிவுகள் அறிவிக்கும் தேர்தல் திணைக்களம் வெளியிடும் விவரத்திலும் சமஷ்டிக் கட்சி என்றுதான் இருக்கிறது.

ஆகையால் தமிழரசுக் கட்சி என்பதுதான் இதன் பெயர் என்பதும் பலருக்குத் தெரியாது. அந்தக் கட்சியினுடைய அடிப்படைக் கொள்கையேதான் கட்சியின் பெயராகப் பல ஆண்டு காளகத் தெரிந்திருந்தது. இதன் பிறகுதான் சரியான பெயரைப் பாவிக்க வேண்டுமென்று இன்றைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி என்றெல்லாம் எழுதுகின்றார்கள்.

### தந்தையின் சவால்

1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்ட போது தந்தை செல்வா தன்னுடைய காங்கேசன்துறை ஆசனத்தை இராஜினாமாச் செய்து அரசிற்குச் சவால் விட்டார். தமிழ் மக்கள் இந்த அரசமைப்பை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை நான் நிரூபிப்பேன் என்றும் ஆகவே ஓர் இடைத் தேர்தலை நடத்துங்கள் என்றும் கேட்டார்.

ஆனால், இரண்டு வருடமாக அரசாங்கம் இடைத் தேர்தல் நடத்தாமல் காலம் தாமதித்தது. இதன் பின்னர் 1974 இல் இடைத் தேர்தல் நடந்த போது அவர் அமோக வெற்றியீட்டினார். அந்தக் காலத்திலே தான் தமிழர் கூட்டணி உருவானது. அது பிறகு தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாறியது. 76 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டை தமிழர் விடுதலைக் கூட்டணி நடத்திய போதுதான் இழந்த இறைமையை நாங்கள் மீளவும் பெற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதுதான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது தீர்மானம்.

இந்தத் தமிழர் விடுதலைக் கூட்டணியில் 3 கட்சிகள் அங்கத்துவக் கட்சிகளாக இருந்தன. தந்தை செல்வநாயகம் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனமூன்று கட்சிகளும் இருந்தன. இந்தக் கூட்டணியின் ஆரம்பத் தலைவர்களாக மூன்று கட்சிகளதும் தலைவர்கள் இருந்தனர்.

### ஜீ.ஜீயும் தந்தையும் காலமானார்கள்

இந்த நிலையில் 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் நடந்தது. அது மிக முக்கியமான பொதுத் தேர்தலாக இருந்தது. ஆனால் அதே வருடத்திலே பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதி ஜீ.ஜீ. பொன்னம்பலம் மரணித்துவிட்டார். அதே போன்று அந்த வருடத்திலே ஏப்ரல் 26 ஆம் திகதி தந்தை செல்வா மரணிக்கிறார். இவ்வாறான நிலையில் ஜுலை மாதத்தில் பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. இவ்வாறு பொதுத் தேர்தல் வருகின்ற பொழுது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தமது கட்சியின் சேவல் சின்னத்தில் போட்டியிட்டார்கள்.

**தொகுப்பு:- எஸ்.நிதர்ஷன்**

### ஆசனப் பங்கீடு

யாழ்ப்பாணம் உட்பட வடகிழக்கில் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிட்டது. இதில் தமிழரசுக் கட்சி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற இரண்டு கட்சிகள் போட்டியிட்டன. ஆனால் இந்த இரண்டுக்கும் இடையில் எப்படியாக ஆசனப் பங்கீடு செய்வது என்ற தொரு பிரச்சினை எழுந்தது. அது ஓர் அடிப்படையிலே தீர்க்கப்பட்டது. அதாவது 70 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலிலே எங்கெங்கு தமிழ்க் காங்கிரஸ் வெற்றி பெற்றதோ அங்கங்கு தமிழ்க் காங்கிரஸ் கட்சியினரும் அதே போன்று எங்கெங்கு தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் வெற்றி பெற்றார்களோ அங்கே தமிழரசுக் கட்சியும் போட்டியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி ஆசனங்கள் கொடுக்கப்பட்ட போது வட்டுக்கோட்டை ஆசனத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் அவர்களுக்கு வட்டுக்கோட்டையிலே போட்டியிட முடியாததால் காங்கேசன்துறைத் தொகுதியிலே தந்தை செல்வாவின் மறைவுக்குப் பிறகு போட்டியிடுவதாக இருந்த அண்ணன் மாவை சேனாதிராசா, அமிர்தலிங்கம் அவர்களைக் காங்கேசன்துறைக்கு வாருங்கள் என அழைத்து அந்த இடத்தை அவருக்கு விட்டுக்கொடுத்தார்.

காங்கிரஸ் வென்றிருந்த வட்டுக்கோட்டை ஆசனம் ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் மகன் குமார் பொன்னம்பலத்துக்கு கொடுக்கப்பட்டது. ஆனபோதும் அவர் தனக்கு அது வேண்டாம், நான் யாழ்ப்பாணத்திலேயே போட்டியிடுவேன், அங்கேயே இடம் வேண்டுமென்று கேட்டார். இந்த முன்னைய தேர்தல் முடிவுகளின் அடிப்படையிலேதான் ஆசனப் பங்கீடு நடைபெறுகிறது, ஆனபடியினாலே வட்டுக் கோட்டையில் போட்டியிடுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் அவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. பின்னர் வட்டுக் கோட்டைத் தொகுதிக்கு இருந்த தியாகராசாவும் அரசுடன் சென்று விட்டதால் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசுவுக்குக் கொடுக்கப்பட்டது.

### குமார் தோல்வி

நல்லூர் ஆசனத்திலே போட்டியிட்டு வெற்றி பெற்ற அருநம்பலம் அரசாங்கத்துடன் சேர்ந்து விட்டார். அது சிவசிதம்பரத்திற்கு கொடுக்கப்பட்டது. ஏனென்றால் 70 ஆம் ஆண்டு உடுப்பிட்டித் தொகுதியில் போட்டியிட்டு அவர் தோல்வியுற்றிருந்த காரணத்தால்.

தனக்கு வட்டுக்கோட்டைத் தொகுதியே கொடுத்தார்கள், ஆனால் தான் கேட்ட யாழ்ப்பாணத் தொகுதி கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தினாலே குமார் பொன்னம்பலம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக யாழ். தொகுதியிலே போட்டியிட்டார். 77 ஆம் ஆண்டு மிகவும் முக்கியமான தேர்தலிலே – தமிழர் விடுதலைக் கூட்டணியாக ஒன்று சேர்ந்து போட்டியிடுகின்ற வேளையிலே – அதிலிருந்து விலகிச் சென்று அதற்கு மாறாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சின்னத்திலே யோகேஸ்வரனுக்கு எதிராகப் போட்டியிட்டு தோல்வியுற்றார் குமார் பொன்னம்பலம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் மூன்று கட்சிகள் இருந்தாலும் கூட அந்தத் தேர்தலிலேயே இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனியாகப் போட்டியிட்டது. யாழ். நகரத் தொகுதியிலே அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் குமார் பொன்னம்பலம் சுயேச்சையாக போட்டியிட்டார். ஆனால் தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸின் பொதுச் செயலாளராக வந்துவிட்டார். இதன் பின் கூட்டணியின் தலைவராக அமிர்தலிங்கம் பதவியேற்றார். இதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவரானார் அமிர்தலிங்கம். இது 77 ஆம் ஆண்டு நடந்த விடயம்.

அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் அனைவருக்கும் தெரியும். இதன் பின்னர் திரும்பவும் ஒரு முறை ஜனநாயக முறையில் ஜனநாயகமாக அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்ற தேவை ஏற்பட்டவுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியாகத்தான் முதலிலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டது. 2000 மற்றும் 2001 இல் போட்டியிட்டது.

### தமிழர் கூட்டணியைப் பிளர்ந்தார் சங்கரி

ஆனால் ஆனந்தசங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்து அந்தக் கட்சியைத் தேர்தலிலே போட்டியிடடியாத வண்ணமாக நீதிமன்ற உத்தரவை எடுத்த காரணத்தினாலே 2004 ஆம் ஆண்டு திரும்பவும் தமிழரசுக் கட்சிதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பதிவு பெற்ற கட்சியாக தேர்தலிலே போட்டியிட வேண்டி ஏற்பட்டது.

ஆனந்தசங்கரி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக வைத்த வழக்கிலே நான்தான் நீதிமன்றில் சட்டத்தரணியாக ஆஜராகியிருந்தேன். தமிழரசுக் கட்சி பழம்பெரும் கட்சி. தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளேயே இருந்த முக்கியமான கட்சியாகவும் தமிழரசுக் கட்சிதான் இருந்தது. ஏனென்றால் அந்தக் கூட்டணிக்குள்ளே இருந்த தமிழ்க் காங்கிரஸ் பிரிந்து போய் விட்டது.

### தமிழரசுக்கு அங்கீகாரம்

ஆனால் ஒரு தனிநபர் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெரியதொரு குடையை தன்னுடையதாக மட்டும் எடுத்துக்கொண்டு வெளியே போனதன் காரணத்தினாலே தமிழரசுக் கட்சி முன்னால் வந்தது. அந்த நேரத்தில் இருந்து தேவையைப் பூர்த்தி செய்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுடைய அங்கீகாரம் பெற்ற கட்சியாக 2004, 2010, 2015 ஆம் ஆண்டுகளில் வீட்டுச் சின்னத்திலே போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தது. இதற்கு மக்களுடைய ஆதரவு முற்று முழுதாக இருந்தது. அது மட்டுமல்லாமல் அதற்கு இடையில் நடைபெற்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் ஏனைய கட்சிகளுக்கு இல்லாத ஆதரவை மக்கள் வழங்கினர்.

### புது அரசமைப்பு

இன்றைக்கு நாங்கள் ஒரு புது அரசமைப்புச் சட்டம் உருவாக்குவதற்கானதொரு வேலைத் திட்டத்திலே இறங்கியிருக்கின்றோம். சமஷ்டி முறையிலான அரசமைப்புச் சட்டம் எங்களுக்குத் தேவை என்பது இந்தக் கட்சியுடைய அடிப்படைக் கோட்பாடு. நான் ஆரம்பத்தில் சொன்னது போன்று கட்சியின் பெயரே அதுவாகவே இருந்தது. அந்த ஆணையின் பிரகாரம் நாங்கள் இப்போது நாட்டில் இருக்கின்ற அனைத்து அரசியல் கட்சிகளோடும் சேர்ந்து அப்படியான அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றோம்.

ஆயுதப்போர் எல்லாம் முறியடிக்கப்பட்டு விட்டது. அதிலும் ஆயுதப் போர் நடந்த காலத்திலே சமஷ்டி அரசமைப்புள்ளங்களுக்குத் தட்டுலேவைத்துக்கொடுக்கப்பட்டது. ஆனால் அதனை வேண்டாம் என்று உதறிவிட்டு இப்பொழுது ஜனநாயக ரீதியிலே நாங்கள் பேச்சுவார்த்தை மூலமாக அதைப் பொறுவதற்கு வலியுறுத்துகிறோம்.

### ரணிலின் பதில்

ஒரு தடவை இப்பொழுது பிரதமராக இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த போது ஊடகவியலாளர் ஒருவர் அவர் இடத்திலே கேள்வி கேட்டார். நீங்கள் திரும்பப் பதவிக்கு வந்தால் 2005 ஆம் ஆண்டிலே நீங்கள் சமஷ்டி கொடுப்பேன் என்று சொன்னீர்கள், அதனைக் கொடுப்பீர்களா? என்று ஊடகவியலாளர் அவரிடத்தே கேட்டார்.

அதற்கு அவர் சொன்ன பதில் 2005 ஆம் ஆண்டு நாங்கள் சொன்னபோது நீங்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டீர்களே. அவ்வாறு வேண்டாமென்று சொல்லித் தானே மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கிவிட்டீர்கள். இப்பொழுது என்னிடத்தே வந்து சமஷ்டி கேட்கிறீர்கள் என்று சொன்னார். இது அவர் சொன்ன பதில்.

### இன்று பொய்ப் பிரசாரம்

அவர் அப்படிச் சொல்லிவிட்டார் என்பதற்காக நாங்கள் சமஷ்டியைக் கைவிடவில்லை. நாங்கள் சமஷ்டி அடிப்படையிலே தான் எங்களுக்கான தீர்வு இருக்க வேண்டுமென்பதில் மிக வும் உறுதியாக இருக்கிறோம். அதனை மீண்டும் மீண்டும் சொல்லுவதற்கான காரணம் இன்றைக்கு பொய்ப்பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதாவது சமஷ்டியைக் கைவிட்டு விட்டார்கள் என்று.

(17 ஆம் பக்கம் பார்க்க...)